O25:417
N3
181854

1330



11 DEC 1931
MADRAS

சம்பத் சுக்ரவார விரதத்தின் கதை

அதாவது

# லக்ஷ்மி பூஜை கதை

ஸ்திரீகள், இப்பூஜை செய்தால்,
புத்திரன் சம்பத்து, பாக்கியம், ஆயுள்,
மாங்கிலியம் இவ்வைந்தும் பெருகும்

இப்புஸ்தகம்
திருக்கோவிலூர் பென்ஷன் ஸ்கூல் சூபர்வைசர்
T. S. ராமய்யாரால் பிரசுரிக்கப்பட்டது.

முதல் பதிப்பு.

ஸரஸ்வதி பிரிண்டிங் ஒர்க்ஸ்,
திருச்சினப்பள்ளி

[விலை அணா 1.

Q25:417
N31
181684

181654

இருக்கிறது. அதை வெட்டி சீர்திருத்தி அதில் ஐந்து வீடுகள் கட்டி அவைகளில் ஐந்து அந்தணர்களை வாசஞ்செய்து வரச் சொல்வாயானால் அவர்களின் மூலமாய் உனக்கு ஓர் புத்திரன் உண்டாவான் என்று சொல்லி அவள் எழுந்திருப்பதற்குள் அந்தர்த்தியானமானார்.

பிறகு சாந்தாதேவி எழுந்து பார்க்கையில் அந்தணரை காணாமையால் சுவாமியே நமக்கு பிரத்யக்ஷமானாரே அவர் காலை கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளாமல் போய்விட்டோமே என்று துக்கப்பட்டு பிறகு நமக்கு புத்திரன் அருளிச் செய்தனரே என்று சந்தோஷப்பட்டு அரசனிடம் சென்று இவ்விஷயங்களை எல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லி ஆரணியத்தை வெட்டி சீர்திருத்தி வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யச்சொன்னாள். அரசனும் வெகு சந்தோஷப்பட்டு அப்பொழுதே சேவகர்களை விட்டு காட்டை வெட்டி சீர் திருத்தி வீடுகளை கட்ட ஏற்பாடு செய்தான். அவர்களும் அத்தப்படியே ஒரு மாதத்தில் ஐந்து வீடுகள் கட்டி முடித்தார்கள்.

அவ்வரசனும் அவ்வீடுகளை ஐந்து அந்தணர்களுக்குத் தானம் செய்து அவ்வீடுகளில் அவர்களை வாசம் செய்யச் சொன்னான். அந்தணர்களும் அதிக சந்தோஷத்தோடு தங்கள் தங்கள் மனைவிகளோடும் பிள்ளைகளோடும் வாசம் செய்துவரலாயினர்.

குணபால அரசனும் சிறிதுகாலம் சந்தோஷமாய் ஆண்டுவந்தான். இது நிற்க.

ஒருநாள் பார்வதியும் பரமேஸ்வரரும் கைலாஸத்தி லிருந்து புறப்பட்டு உலக சஞ்சாரம் செய்யச்சென்று ஆங்காங்குள்ள மகாத்மாக்களையும் துஷ்ட ஜனங்களையும் முறையே ரக்ஷித்தும் சிக்ஷித்தும் வரும்போது குணபாலன்

கட்டிவைத்த விடுதிகளையும் அவ்வந்தணர்களையும் பார்க்க விரும்பிய பார்வதி, பரமேஸ்வரரைப் பார்த்து, பிராணநாதா நீர் முன்னம் பிராமண உருவெடுத்து குணபாலனுக்குப் புத்திர பாக்கியத்திற்காக ஐந்து வீடுகள் கட்டி தானம் செய்யச்சொன்னீர்களே அந்த வீடுகளைப்போய் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் மிகுதியாய் இருக்கிறது. ஆதலால் வாரும் போய் பார்த்துவிட்டு வரலாம் என்றாள்.

பரமேஸ்வரர்:—ஏ பார்வதி எங்குவந்தாலும் இங்கு போகவேண்டும் அங்கு போகவேண்டும் என்கிறாய். பெண்களுடைய பழக்கமே இதுதான். நீ போனால் அங்கு ஒருவரும் உன்னை லக்ஷியம் செய்து வா வா என்று கூப்பிடப் போவதில்லை. யாரோ ஒருத்தி மாத்திரம் வா என்று கூப்பிடப் போகிறாள். ஏன் போகவேண்டும் என்கிறாய் என்றார்.

பார்வதி:—எப்படியானாலும் சரி பார்த்துத்தான் திரும்ப வேண்டும் என்று பிடிவாதம் செய்தாள்.

பரமேஸ்வரர்:—சரி போகலாம் ஆனால் நான் மட்டும் உன்னுடன் வரமாட்டேன். வாயலில் நிற்கின்றேன் என்று சொல்லி ஆகாயத்திலிருந்து கீழிறங்கி அந்த பஞ்சமந்திரம் என்னும் கிராமத்துள் சென்றார்.

பார்வதி:—பரமேஸ்வரரை வெளியில் நிறுத்திவிட்டு முதல் வீட்டு வாசலில் வந்தாள்.

அவ்வீட்டுக்கு உடையவளான கோள் சொல்லி குப்பம்மாள் என்பவள் தாம்பிர சொம்பில் சாணி கரைத்து வாசலில் தெளிக்கவந்து இப்பார்வதியைப் பார்த்து ஒத்திப் போ எட்டிப் போ என்று சாணி தெளிக்க ஆரம்பித்தாள். அதைப்பார்த்த பார்வதி சீ சீ இதென்ன வீடு இந்த அவ

லக்ஷண வீட்டில் நுழையக்கூடாது என்று அதற்கடுத்த வீட்டு வாசலுக்குச் சென்றாள். அவ்வீட்டுக்குடையவளான அடிக்கொள்ளி அன்னம்மாள் என்றவள் தன் மாமியார் தன்னை முண்டை என்று வைதாள். தன் மாமியாரை கழுதை முண்டை என்று வைதுகொண்டு இருந்தாள். இதைப் பார்த்த பார்வதி சீ இதுவும் நமக்குத் தகாது என்றெண்ணி மறுவீட்டு வாசலில் அந்த வீட்டுக்குடையவளான தெருவு சுற்றி ராமக்காள் என்பவள் அன்று வெள்ளிக்கிழமையா யிருந்தும் அடுப்பு சாம்பலை வாராமலும் வீட்டை மெழுகி கூட்டி கோலமிடாமலும் ஒருகையில் தலையிலிருந்து பேன் எடுத்து சொடக்கிக்கொண்டும் ஒருகையில பழைய சாதம் பிசைந்து பிள்ளைகளுக்குப் போட்டுக்கொண்டு தானும் சாப்பிட்டுக்கொண்டும் உட்கார்ந்திருந்தாள். இதைப்பார்த்த பார்வதி சீ மூதேவி வீடு என்று நாலாம் வீட்டில் புகுந்தாள். அவ்வீட்டுக்குடையவளான எருமைக்காது எச்சம்மாள் என்பவள் ஈய பாத்திரத்தில் பாலை வைத்துவிட்டு வெள்ளிக் கிழமையில் நெல் புழுக்கி நெல்லை உரலில்போட்டு குத்திக் கொண்டிருந்தாள். இதையும் பார்த்த பார்வதி சீ இதுவும் நமக்குத்தகாதென்று எண்ணிக்கொண்டு ஐந்தாம் வீட்டினுள் புகுந்தாள். அவ்வீட்டின் வாயலிலும் உள்ளிலும் அழகாக மெழுகி கொலமிட்டு அலங்காரமாக விளங்கியது. பார்வதி சந்தோஷப்பட்டு உள்ளே புகுந்தாள். அங்கு துளசி மடத் திற்கு கோலமிட்டு ஓர் விளக்கு ஏற்றிவைத்து ஏ அம்மணீ ஏ பிருந்தாவனவாஸினீ சீக்கிரத்தில் என் வறுமையை நீக்குவாய் என்று ஸ்தோத்தரித்துக்கொண்டு ஓர் ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள். பார்வதி உள்ளே வந்ததும் அந்த ஸ்திரீ எழுந்து அம்மா வாருங்கள். ஏழை வீட்டுக்கு மனதிறங்கி வந்தீர்களே வாருங்கள் என்று ஓர் ஆஸனம் கொடுத்து உட்காரச்சொன்னாள். பார்வதி அவ்வாசனத்தில் அமர்ந்து

ஸ்திரீயே உன் பெயர் என்ன மிக்க ஏழையைப்போல் இருக்கிறாயே என்றாள்.

அந்த ஸ்திரீ:—ஓ அம்மணி என் பெயர் அக்கம்மாள் என்று சொல்வார்கள். நான் மிகவும் ஏழை என் வீட்டில் பிடி அரிசிகூட கிடையாது. பிரதிதினமும் என் புருஷனும் என் பிள்ளையும் உபாதானம் (பூஷ்டி) எடுத்துக்கொண்டு வருவார்கள். அது எங்கள் அரை வயிற்றுக்குக்கூட போதாது. முன் ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேனோ இந்த ஜன்மத்தில் இவ்வறுமையில் கஷ்டப்படுகிறேன். நீங்களாவது இதற்கு வழி சொல்லவேண்டும் என்று அதிக வினயத்தோடு கேட்டுக் கொண்டாள்.

பார்வதி:—ஏ அக்கம்மா உனக்கு என்ன பாபத்தினால் வறுமை வந்தது என்பதைச் சொல்லுகிறேன் கேள். நீ முன் ஜன்மத்தில் ஓர் அம்மனை பூஜைசெய்து வந்தாய். பிறகு யாது காரணத்தினாலோ அந்தப் பூஜையை குறைவர செய்து பூர்த்தி செய்யாமல் விட்டு விட்டாய். அதனால்தான் இந்த ஜென்மத்தில் வருந்துகின்றாய் என்றாள்.

அக்கம்மாள்:—ஓ அம்மணீ என்னுடைய பாபத்தை எவ்வாறோ அறிந்து சொன்னாயே. எனக்கு வருமை நீங்கும் விதத்தையும் நீயே உரைக்கவேண்டும் அம்மணீ என்றாள்.

பார்வதி:—ஆகா அப்படியே ஆகட்டும். நீ இன்று முதல் சம்பத் சுக்ரவாரமென்ற பூஜையை செய்து வந்தாயானால் உனக்கு சகல பாக்கியமும் உண்டாகும். அப் பூஜையை ஐந்து வருஷமும் பூஜை நடத்தவேண்டும். அந்த ஐந்து வருஷமும் நடத்தவேண்டிய விதம் சொல்கிறேன்கேள். முதல் வருஷம் புத்திரன் உண்டாவதற்கு பூர்ண கலசம் வைத்து பூஜை செய்யவேண்டும். அது எப்படியெனில் ஓர்

சொம்பில் நிறைய சுத்தஜலம் வைத்து அதன்மேல் மஞ்சளில் அம்மனை பிடித்து வைத்து அல்லது மஞ்சக்கொம்பில் குறுக்கில் முளைத்திருக்கிற மஞ்சக்கொம்பை வைத்து அம்மனை அதில் ஆவாஹனம் செய்து ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பூஜை செய்யவேண்டும். இப்பூஜையை முதலில் எப்பொழுது ஆரம்பிப்பதென்றால் தை மாதம் முதல் வெள்ளிக் கிழமையன்று ஆரம்பிக்கவேண்டும். முதலில் தை மாதம் வெள்ளிக்கிழமையன்று எந்தக் கலசம் வைக்கிறார்களோ அந்தக் கலசமே அவ்வருஷம் பூராவும் வைக்கவேண்டும். அந்த வருஷத்தின் நடுவில் வேறொரு கலசமும் மாற்றக் கூடாது. இரண்டாவது வருஷம் சம்பத்து பெருகுவதற்கு சந்தனக் கல்லின்மேல் அம்மனை மஞ்சளில் ஆவாஹித்து பூஜை செய்யவேண்டும். மூன்றாவது வருஷம் பாக்கியம் பெருகுவவற்கு பால் கலசம் அதாவது சொம்பு நிறைய பால் வைத்து மேற் சொன்னபடி அதின்மேல் அம்மனை ஆவா ஹித்து பூஜை செய்யவேண்டும். நான்காவது வருஷம் ஆயுள் வளருவதற்கு படியில் நிறைய அரிசிவைத்து அதன் மேல் மேற்சொல்லியபடி அம்மனை வைத்து பூஜை செய்ய வேண்டும். ஐந்தாம் வருஷம் மாங்கிலியம் பெருகுவதற்கு வெற்றிலை நுனிமேல் மற்றொரு வெற்றிலை நுனியைப்போட்டு அதாவது வெற்றிலை பின்புறக்காம்புகள் வெளியில் இருக்கு மாறு வைத்து அம்மனை அதின்மேல் வைத்து பூஜை செய்ய வேண்டும். அல்லது வாயிற்படியிலாவது வெற்றிலை கட்டின் மேலாவது வைத்து பூஜை செய்யவேண்டும். ஐந்து வருஷ மும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஐந்து சுமங்கிலி ஸ்திரீ களை சாப்பிடச்செய்து வெற்றிலை பாக்கு கொடுத்து அனுப்ப வேண்டும். கடைசி வெள்ளிக்கிழமையன்று ஐந்து சுமங்கிலி களை சாப்பிடச்செய்து ஒவ்வொருவருக்கும் இரண்டு முறம் சிப்பு, கண்ணாடி, புஷ்பம், சந்தனம், மஞ்சள், குங்குமம் தக்ஷணை முதலியவைகளை அம்முறத்தில்வைத்து முறத்தைதலைன்

றின்மேல் ஒன்ருக மூடி ஒரு ரவிக்கைத்துண்டும் கொடுக்க வேண்டும். பணக்காரர்களாயிருந்தால் புடவை வாங்கிக் கொடுக்கலாம். அக்கம்மா அப்படிப்பட்ட வெள்ளிக்கிழமை பூஜையை இந்த தை மாதம் வெள்ளிக்கிழமையில் உனக்கு பூஜை எடுத்துவைக்கிறேன். நீ இந்தப்படியே ஐந்து வருஷமும் பூஜித்தாயானல் உனக்கு சகல பாக்கியமும் கிடைக்கும் என்று சொல்லி அக்கம்மாளுக்கு முதல் வருஷம் பூர்ண கலசம் வைத்து பூஜையை எடுத்து வைத்தாள். அக்கம்மாள் வெகு சந்தோஷத்துடன் பூஜையை முடித்தாள். பூஜை முடிந்த சிறிது நேரத்திற்குப் பிறகு பார்வதி அக்கம்மாளைப் பார்த்து ஏ அக்கம்மா நான் வந்து அதிக நேரமாயிற்று. நான் மிகப் பசியாயிருக்கிறேன். எனக்கு அன்னம் படைப்பாய் என்றனள். அதற்கு அக்கம்மாள் அம்மணீ நான் எங்ஙனம் உனக்கு அன்னம் படைப்பேன். வீட்டில் பிடி அரிசி கூட இல்லையே. என் பிள்ளையும் புருஷரும் உபாதானத்திற்கு போயிருக்கிருர்கள் பக்கத்து வீடுகளில் கடன் கேட்டாலும் ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். நான் என்னசெய்வேன் என்ருள்.

பார்வதி:—ஓ அப்படியல்ல இன்று நீ உன் பக்கத்து வீட்டுக்குப்போய் அரிசி கேட்டுப்பார் கொடுப்பார்கள் என்ருள்.

அக்கம்மாள்:—சரி, அப்படியே என்னமோ போய் பார்க்கிறேன் என்று பக்கத்து வீட்டுக்கு கடன் வாங்கச் சென்ருள். ஸாக்ஷாத் பார்வதிவந்திருக்கையில் யார்தான் கொடுக்கமாட்டார்கள். பார்வதி அவர்கள் மனதில் புகுந்த தினலே இவ்வக்கம்மாள் போய் அரிசி கடன் கேட்டதும் கூடை நிறைய அரிசி வாரிக்கொடுத்து இன்னும் வேணுமானலும் எடுத்துப்போ என்று சொன்னள். அக்கம்மாள் அரிசியை எடுத்துப்போய் தன் வீட்டுக்கூடத்தில் கொட்டி

ளுள். என்றும் பானையை விலைக்குத் தருகிற குயவன் விலையில்லாமலே அடுக்குப் பானைகளை கொண்டுவந்து போட்டுவிட்டு போய்விட்டான். பிறகு அக்கம்மாள் சிறிது அரிசி எடுத்துக்கொண்டு உள்ளே சமையல் செய்யச் சென்ருள். அப்பொழுது பார்வதி அப்பானைகளில் தன் கையினுல் அரிசியை எடுத்து அக்ஷயம் அக்ஷயம் என்று போட்டாள் (அக்ஷயம் என்ருல் அப்பானைகளிலிருந்து எவ்வளவு எடுத்தாலும் குறையாது.) இது நிற்க உபா தானத்திற்குச் சென்ற அக்கம்மாளின் புருஷனும் பிள்ளையும் உபாதானம் வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். வரும்போது பிள்ளை தகப்பனைப் பார்த்து அப்பா இன்று ஏன் தூக்கமுடியாமல் இவ்வளவு அரிசி கிடைத்திருக்கிறது. பிரதிதினமும் ஒவ்வொரு வீட்டி லும் அரிசிபோடாமல் அடித்து விரட்டுவார்களே. இன்று நாம் வீட்டில் புகுவதற்கு முன்னமே படி நிறைய அரிசி கொண்டுவந்து போட்டுவிட்டார்களே. அதிருக்கட்டும் அப்பா தினமும் அரிசி கொண்டுபோன பிற்பாடுதான் என் தாயார் அடுப்பு மூட்டி சமையல் செய்வாளே. இன்று என்னமோ நாம் வருவதற்கு முன்னமே அடுப்பு புகை கின்றதே என்ருன்.

தகப்பன்:—குழந்தாய் ஏதாவது கீரை சுண்டுவாள். உள்ளே போய்ப்பார்ப்போம் என்று உள் புகுந்து கூடத்தில் அரிசியைக் கொட்டினுர்கள். பிறகு அக்கம்மாளைப் பார்த்து அவள் புருஷன் பெண்ணே இன்று ஏது இவ்வளவு பானை களில் நிறைய அரிசி என்ருன். அக்கம்மாள் தன் புருஷனை பார்த்து சுவாமி இன்று நம் வீட்டுக்கு ஓர் பெரிய சுமங்கிலி அம்மாள் வந்தாள். எனக்குச் சம்பத் சுக்ரவாரம் என்ற பூஜையை எடுத்து வைத்தாள். அந்த அம்மாளால் இவ்வளவும் கிடைத்திருக்கிறது. அந்தம்மாள் பின்கட்டில்

இருக்கிருள். நீங்களிருவரும் ஸ்நானம் செய்துவிட்டு வாருங்கள் அந்தம்மாள் முன்னமே அதிக பசியென்று சொல்லிக்கொண்டிருந்தாள். சீக்கிரம் வாருங்கள் என்ருள். தகப்பனும் பிள்ளையும் ஸ்நானம் செய்ய குளத்திற்குச் சென்ருர்கள். அக்கம்மாள் சமையலைக் கவனிக்க உள்ளே சென்ருள். பார்வதி இதுதான் நல்ல சமயம் என்று அறிந்து வெளியில் வந்து அங்கு இருக்கிற பரமேஸ்வரரைப் பார்த்து வாருங்கள் போகலாம் என்ருள். பரமேஸ்வரர் பார்வதியைப் பார்த்து போனகாரியத்தை சாதித்துவிட்டாய் இதுதான் பெண்களுடைய சாமர்த்தியம் என்று சொல்லிவிட்டு இருவரும் புறப்பட்டு கைலாசம் சென்ருர்கள் இதுநிற்க குளத்திலிருந்து அக்கம்மாளுடைய புருஷனும் பிள்ளையும் குளித்து விட்டு வீட்டுக்கு வந்தார்கள். அக்கம்மாள் மூன்று இலைபோட்டு பரிமாரிவிட்டு மூன்று இலை ஆகாதென்று நான்காவது இலைபோட்டு பரிமாரி தன் புருஷனையும் பிள்ளையையும் உட்காரச்சொல்லிவிட்டு பின்கட்டிற்கு வந்து பார்வதியைப் பார்த்தாள். வீடு முழுவதும் தேடினுள். காணவில்லை. பார்வதி அவள் வீட்டுக்குச் சாப்பிட வந்திருந்தாலல்லவோ இருப்பாள். பிறகு அக்கம்மாள் ஓகோ ஜகத் ரக்ஷகியே எனக்குப் பிரத்தியக்ஷமாக வந்து பூஜை எடுத்து வைத்தாளே. இப்பொழுது பின்கட்டில் இருந்தாள் எப்படி போய்விடுவாள் ஆகையால் கட்டாயம் சாக்ஷாத் பார்வதிதான் வந்திருந்தாள். அந்தோ தெரியாமற்போய்விட்டதே. ஏ ஜனனீ, ஏ ஜலலோசனி, ஏ ஜகன்மாதா, ஏ ஸ்ரீதேவி, ஏ லோகமாதா, ஏ அம்மணீ, ஏ கமலலோசனீ, ஏ அம்பிகே, ஏ மஹிஷாஸுர மர்த்தனீ, ஏ சிவசங்கரீ, ஏ உமாதேவி உன்னை அறியாத பாபியாய் விட்டேனே என்று வருந்தி தன் புருஷனிடத்திற்குப்போய் அந்தோ சாக்ஷாத் ஈஸ்வரியே நம்வீட்டுக்கு விஜயம் செய்திருந்தாளே அறியாமல் போய்விட்டேனே என்று சொல்லிவிட்டு புருஷனுக்கும் பிள்ளைக்கும் அன்னம் படைத்துவிட்டு

181654

தானும் உண்டு சுக்ரவார பூஜையை விடாமல் ஐந்து வருஷம் நடத்திவந்தாள். ஐந்து வருஷம் வரையில் பாக்கியம் பெருக வில்லை. அக்கம்மாளுக்கு பணம் இல்லாததினால் தயிர்க்காரி நெய்க்காரி முதலானவர்கள் பணமில்லாமலே வெறுமனே ஊற்றிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். இப்படியே சிறிதுகாலம் கடந்து வந்தது. கடைசியில் சுக்ரவார பூஜை முடியும் நாள் அதாவது ஐந்தாவது வருஷக் கடைசி நாள் வந்தது. அன்று தன்னாலானவரையில் கடன் வாங்கி ஐந்து சுமங்கிலிகளை சாப்பிடச்செய்து ரவிக்கை, இரண்டு முறம், சீப்பு, கண்ணாடி, புஷ்பம், மஞ்சள், சந்தனம், குங்குமம், தக்ஷிணை, முதலியன கொடுத்து அவர்களை திருப்தி செய்து அனுப்பினாள். அன்று தயிர்க்காரி அக்கம்மாளிடம் வந்து அம்மா இன்று என் புருஷனுக்கு உடம்பு சுகமில்லை. ஆகையால் தயிர் விற்க நேரமில்லை, இவ்வளவு தயிரையும் நீயே எடுத்துக்கொள் என்று பணமில்லாமல் அவ்வளவு தயிரையும் ஊற்றிவிட்டுச் சென்றாள். மறு வெள்ளிக்கிழமை விடிந்து அக்கம்மாள் எழுந்ததும் அவள் வீடு பெரிய மாளிகையாயும் அதில் குறைவின்றி சகல தான்யங்களும், தங்கம், வெள்ளி, பொன், ரத்னம், மாணிக்கம் முதலியன நிறைந்திருக்கவும் கண்டாள். தன் புருஷனிடமும் பிள்ளையிடமும் சொல்லவேண்டுமென்று சந்தோஷமாய் இருந்தாள். அன்று தயிர்க்காரி வந்ததும் அக்கம்மாள் அவளிடம் நேற்று வாங்கின தயிருக்கும் பணம் கொண்டுவந்து இதோ உன் பணம் என்று தயிர்காரியிடம் கொடுத்தாள். அந்தத் தயிர்க் காரி மிகவும் ஆச்சரியப்பட்டு அக்கம்மா இதென்ன விநோதம் நேற்று கந்தல் உடுத்திக்கொண்டு ஒரு காசு தயிருக்கு கூட விதியில்லாமல் இருந்தாயே. இன்று என்ன மச்சும், மாளிகையும், ஆடை ஆபரணமும், ஜ்வலிக்க பணம் கொண்டு வந்து கொடுக்கிறாயே என்று கேட்டாள். அக்கம்மாள் அதற்கு தயிர்காரி நான் ஐந்து வருஷமாய் ஸ்ரீ லக்ஷ்மி

பூஜை அதாவது சம்பத் சுக்ரவாரமென்ற வெள்ளிக்கிழமை பூஜையை வெள்ளிக்கிழமைதோறும் செய்துகொண்டு வந்தேன். ஆகையால் இப்பொழுது இவ்வாறு சம்பத்தும் பாக்கியமும் பெருகி இருக்கின்றன என்றாள். தயிர்க்காரி அம்மா என் புருஷன் ஐந்து வருஷமாய் காய்ச்சலோடு உடம்பு சுகமில்லாமல் படுத்திருக்கிறார். குணபால அரசர் வீட்டுக்கு பால் கறந்துகொண்டிருந்தார். அதனால் எங்களுக்கு ஜீவனமிருந்தது. பிறகு அவரும் ஜுரத்தோடு படுத்தபின் நான்தான் தயிர் விற்று சம்பாதிக்க வேண்டியவளாய்விட்டேன். எப்படியாவது என் புருஷனை உயிரோடு எழுப்பித்தரவேணும் அம்மா என்று வேண்டிக்கொண்டாள்.

அக்கம்மாள்:—அப்படியே ஆகட்டும் சற்றிரு இதோ பூஜையைசெய்து அக்ஷதை தருகிறேன். இன்று வெள்ளிக் கிழமையல்லவா. நீயும் இப்பூஜையை எடுத்துக்கொள். நீயும் ஐந்து வருஷம் பூஜை செய்து பூர்த்தி செய்வாய் என்று சொல்லி தான் பூஜை செய்து அக்ஷதை கொடுத்தாள். தயிர்க்காரி அதை வாங்கிக்கொண்டுபோய் தன் புருஷன்மீது போட்டவுடனே அவன் ஒரு பாதையுமின்றி சுகமாக எழுந்து அரசன் வீட்டுக்குப் பால் கறக்கச் சென்றான். ராணி சந்தாதேவி அவனைப்பார்த்து ஆச்சரியப்பட்டு இவ்வளவு நாள் உடம்பு சுகமில்லாமல் படுத்திருந்தாயே. இன்று எப்படி திடீரென்று எழுந்து சுகமாக வந்தாய் என்று வினவினாள் அதற்குத் தயிர்க்காரி புருஷன் எனக்குத் தெரியாது என் மனைவிக்குத்தான் தெரியும் என்று சொல்லி பால் கறந்து விட்டு வீட்டுக்குச்சென்றான். அன்று தை வெள்ளிக்கிழமை யாதலால் அத்தயிர்க்காரி சம்பத்சுக்ரவார பூஜையை முதலில் எடுத்து பூஜை செய்தாள். தயிர்க்காரிக்கு அன்றே சகல சம்பத்தும் பாக்கியமும் பெருகிவிட்டது. மறுநாள் தங்கக் கூடையில் வெள்ளிப்பானையில் தயிர் எடுத்துக்கொண்டு

அநேக ஆடையாபரணங்களை பூட்டிக்கொண்டு அரசன் வீட்டிற்குத் தயிர் விற்கப்போனுள். ராணி சாந்தாதேவி அவளைப் பார்த்து தயிர்க்காரி நேற்று ஏழையாயிருந்தாய். உன்புருஷனும் ஐந்து வருஷமாய் உடம்பு சுகமில்லாமல் இன்று அவனும் சுகமாக வந்து பால் கறந்தான். நீயும் ஆடையாபரணங்களைப் பூட்டிக்கொண்டு தங்கக்கூடை முதலியன வைத்துக்கொண்டு வந்திருக்கிருயே. இதென்ன அதிசயம் என்ருள் ஓ ராணிதேவி எனக்கு சம்பத்து வந்ததையும் என் புருஷனுக்கு உடம்பு சுகமானதையும் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சொல்லுகிருள்.

இவ்வூரின் பக்கத்தில் பஞ்சமந்திரம் என்றொரு கிராமம் இருக்கிறது அதில் கடைசி வீட்டில் ஒரு அம்மாள் இருக்கிருள். அவள் பெயர் அக்கம்மாள். அவள் வெள்ளிக் கிழமை பூஜை செய்துகொண்டு அக்ஷதை கொடுத்தாள். அதை என் புருஷன் மீது போட்டேன். அவர் சுகமாக எழுந்துவிட்டார் பிறகு அக்கம்மாள் சம்பத் சுக்ரவாரம் என்ற பூஜையை எனக்கு எடுத்துவைத்தாள். அந்த பூஜையை ஐந்து வருஷம் செய்யவேண்டும். முதல் வருஷம் புத்திரன் உண்டாவதற்கு பூரண கலசமும், இரண்டாவது வருஷம் சம்பத்து கிடைக்க சந்தனக்கல்லின்பேரிலும், மூன்ருவது வருஷம் பாக்கியம் பெருக பால் கலசத்தின் பேரிலும், நான்காவதுவருஷம் ஆயுள் விர்த்தியாக படி நிறைய அரிசி வைத்தும், ஐந்தாவது வருஷம் மாங்கிலியம் பெருகுவதற்கு வெற்றிலை மேலும் வைத்து பூஜை செய்யவேண்டும். உமக்கு புத்திரன் இல்லையே அப்பூஜையை எடுத்துக்கொள் என்று சொன்னுள்.

ராணி:—தயிர்காரி, அப்படியா! எனக்கு புத்திரன் இல்லை. அக்கம்மாளுக்குச் சொல்லி அனுப்பட்டுமா என்ருள்.

தயிர்க்காரி:—ஆஹா அப்படியே சொல்லி அனுப்பு என்று சொல்லி வீட்டுக்குப்போய்விட்டாள். பிறகு ராணி நாலு ஐந்து ஆட்களுடன் ஓர் பல்லக்கைக் கொடுத்தனுப்பி அக்கம்மாளை அழைத்து வரச்சொன்னாள். அச்சேவகர்கள் பஞ்சமந்திரத்திற்குப்போய் அக்கம்மாளை அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லிக் கூப்பிட்டார்கள். அக்கம்மாள் அவர்களைப் பார்த்து சேவகர்களே முன் என் புருஷன் அரசன் வீடு என்று பிக்ஷைக்கு வந்தால் அரிசி போடாமல் அடித்துத் துரத்தினார்களே, அப்படிப்பட்ட வீட்டிற்கு நான் வருவதில்லை என்று சொல்லி உள்ளே போய்விட்டாள். சேவகர்கள் ராணியிடம் போய் அக்கம்மாள் வரமுடியாது என்று சொல்லி விட்டாள் என்று சொன்னார்கள். ராணி உடனே பூஜைக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக்கொண்டு அக்கம்மாளிடம் சென்று தன்னை மன்னிக்கும்படி சொல்லி அன்று பூஜையை எடுத்துக்கொண்டாள். ராணி ஐந்து வருஷம் பூஜைசெய்து பூர்த்தி செய்தாள். பிறகு ராணிக்கு மிக அழகான கோடி சூர்யப்பிரகாசம்போல் ஓர் ஆண் குழந்தை ஜனித்தது. அரசனும், அரசியும், குழந்தையும் வெகுகாலம் சந்தோஷமாக குடிகளோடு வாழ்ந்து வந்தார்கள்.

இக்கதையால் பார்வதி அக்கம்மாளுக்குச் சொன்ன பலன் கேட்டபலன் அக்கம்மாள் தயிர்க்காரிக்குச் சொன்ன பலன் கேட்டபலன், தயிர்க்காரி ராணிக்குச் சொன்னபலன் கேட்டபலன், ராணி பூலோகத்தாருக்குச் சொன்னபலன் இதைப் படிக்கும் சகோதரிகள் எல்லோரும் சம்பத் சுக்ர வாரம் என்ற பூஜையை மெற்கொண்டு சம்பத்து, பாக்கியம், புத்திரர்கள் முதலியவைகள் அடைந்து சுகம் பெற்று வாழ்வார்களாக. ஸ்ரீ தண்டாயுதபாணி துணை. சுபம்.

———

181654

இக்கதையை வாசித்த பிறகு இந்த லக்ஷ்மி பூஜை செய்யவேண்டுமென்ற பக்தி சிரத்தையுள்ளவர்கள் பின்வரும் 13 குறிப்புகளின்படி நடக்கவேண்டும்.

குறிப்புகள்:—

1. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மங்கள ஸ்நானம் செய்துவிட்டு பூஜை ஆரம்பிக்கவேண்டும்.

2. முதல் முதலில் பூஜை ஆரம்பிக்க தை மாதத்தில் எந்த வெள்ளிக்கிழமை நல்ல நாளாயிருக்கிறதோ அந்த வெள்ளிக்கிழமையில் பூஜை ஆரம்பிக்கவேண்டும்

3. முதல் பூஜை ஆரம்பிக்கும்போது உபாத்தியாயரைக் கொண்டு பூஜை, நடத்தவேண்டும்.

4. கிராமங்களில் உபாத்தியாயர் கிடைப்பது அரிதாயிருப்பதாலும் பட்டணங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பூஜை செய்துவைக்க வருவதற்கு அவருக்கு அவகாசமில்லாததாலும் தமிழில் அச்சிடப்பட்டு விற்கப்படும் பின்வரும் இரண்டு புஸ்தகங்களை வாங்கி வைத்துக்கொண்டு உபாத்தியாயர் இல்லாமலே நீங்களே பூஜை செய்துக் கொள்ளலாம்.

(i) திரிகல்ப புஸ்தகம்:—இதில் விநாயகர் பூஜை, லக்ஷ்மி பூஜை, ஸரஸ்வதிபூஜை இம்மூன்றும் தமிழில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

(ii) லக்ஷ்மி ஸஹஸ்ர நாம புஸ்தகம்.

5. ஒவ்வொரு பூஜையும் ஆரம்பிப்பதற்கு முன் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து விநாயகர் பூஜை செய்த பிறகு லக்ஷ்மி பூஜை ஆரம்பிக்கவேண்டும்.

6. லக்ஷ்மி அஷ்டோத்ரம் சொல்லி அர்ச்சனை செய்யவேண்டும். சாவகாசமிருந்தால் ஸஹஸ்ரநாமம் செய்யலாம்.

"ஓங்காரத்தைச் சொல்லாமல் நாமத்தைமாத்திரம் சொல்லி அர்ச்சிக்கவும்."

7. புஷ்பம் அதிகமாய்க் கிடைக்காவிடில் மஞ்சள் அக்ஷதையைக்கொண்டு அர்ச்சனை செய்யலாம்.

8. நைவேத்தியம் குறைந்தபக்ஷம் பாயஸம் இல்லாமல் செய்யக்கூடாது.

9. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பூஜை செய்த பிறகு ஐந்து சுமங்கிலிகளுக்குச் சாப்பாடு போட சக்தி இல்லாவிடில் ஐந்து சுமங்கிலிகளுக்குக் குறையாமல் சந்தனம், மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழம் குறைந்தது காலணாவாகிலும் தக்ஷிணை கொடுத்தனுப்பவேண்டும. ஆனால் ஐந்தாவது வருஷம் கடைசி வெள்ளிக்கிழமை பூஜை சமாப்தி யன்று சம்பத் சுக்ரவார கதையில் சொல்லியிருக்கிறபடி நடக்கவேண்டும்.

10. பூஜையான பிறகு சுமங்கிலிகளுக்கு வெற்றிலை பாக்கு முதலியன கொர்டுத்து அனுப்பின பிறகு லக்ஷ்மி அஷ்டோத்ர ஸ்தோத்தரமும், லக்ஷ்மி அஷ்டகமும் சம்பத் சுக்ரவார கதையும் கட்டாயம் வாசிக்கவேண்டும். சாவகாச மில்லாவிட்டால் ராத்திரியில் அஸ்தமித்தவுடன் வாசிக்கத் தவறக்கூடாது. வாசிதத பிறகு பழம், கற்கண்டு ஏதாவது நிவேத்யம் செய்து கற்பூர ஹார்த்தி எடுக்கவேண்டும்.

11. பூஜை செய்யும் தினத்தில் இரண்டு வேளையும் போஜனம் செய்யலாம்.

12. பகலில் பூஜை செய்த பிறகும், ராத்திரியில் கற்பூர ஹார்த்தி எடுத்த பிறகும் லக்ஷ்மியை ஸ்தோத்தரிக்கும் பாட்டுகள் பாடி ஹார்த்தி எடுக்கவேண்டும்.

13. ராத்திரியில் ஹார்த்தி எடுத்த பிறகு தான் மடியோடு கலசத்தை எடுத்து யதாஸ்தானம் செய்து அதி லுள்ள அரிசி, பால், வெற்றிலை முதலியவைகளை தன் குடும்பத்துக்குத்தான் உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

---

இப்புஸ்தகம் வேண்டுபவர்கள் பின் கண்ட
விலாசத்திற்கு எழுதி தருவித்துக்கொள்ளலாம்

---

**1. R. நடராஜய்யர்,**

நெ. 7, மாரியம்மன்கோவிலுக்கருகில்,

மேட்டுத்தெரு, சேலம் டவுன்.

**2. T. S. ராமய்யர்,**

$\frac{1272}{1}$ பாலப்பச் சந்து.

மேல ராஜவீதி, தஞ்சாவூர்.

குறிப்பு :—புஸ்தகம் அதிகமாய் வாங்குபவர்களுக்கு
தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.